SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

**TERMENAL EXAM - 1**
**TAMIL (III LANG)**

**Class: 7** **Max Marks: 80**
**Date: 27.9.19** **Time: 3 hrs**

**பகுதி – அ (படித்தல்)**

**1. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. (5)**

ஊன் உண்ணும் விலங்குகளில் கவர்ச்சியும், கம்பீரமும் மிகுந்த புலி இந்தியாவின் தேசிய விலங்கு ஆகும். 1972 ல் புலி இந்தியாவின் தேசிய விலங்காக தேர்ந்தெடுக்கப் பட்டது. தேசிய விலங்கை கொல்வது சட்டப்படி குற்றம் ஆகும். எனவே அவற்றை பாதுகாக்க வேண்டும். 2001 ல் புலிகளின் எண்ணிக்கை 3642 ஆக இருந்தது. ஆனால் இப்போது 1411 ஆக குறைந்துள்ளது. 1973ல் தொடங்கப் பட்ட புலிகள் பாதுகாப்புத் திட்டம் ஒரு முழுமையான சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டமாகும்.

**வினாக்கள்**

i. இந்தியாவின் தேசிய விலங்கு எது?
அ) சிங்கம் ஆ) புலி இ) யானை ஈ) சிறுத்தை

ii. தேசிய விலங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு
அ) 1972 ஆ) 1973 இ) 2001 ஈ) 1970

iii. 2001 ல் புலிகளின் எண்ணிக்கை
அ) 2000 ஆ) 1411 இ) 3642 ஈ) 1972

iv. புலிகள் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப் பட்ட ஆண்டு
அ) 1972 ஆ) 1973 இ) 2001 ஈ) 1970

v. புலிகள் பாதுகாப்புத் திட்டம் ஒரு __________________ திட்டமாகும்.
அ) காடுகள் பாதுகாப்புத் ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்புத்
இ) மரம் வளர்ப்புத் ஈ) நீர் பாதுகாப்புத்

**2. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. (5)**

மருத்துவத் தொழிலுக்கு பாம்பின் நஞ்சு மிக இன்றியமையாததாகும். இது பொன்னை விட மேன்மையானது. 140 கிராம் நஞ்சை எடுப்பதற்கு 20 ஆயிரம் பாம்புகள் தேவைப்படுகின்றன. பாம்பின் பல்லிலிருந்து நஞ்சைப் பிழிந்தெடுக்கின்றனர். இரஷ்யாவில் ஒரு கிராம் நஞ்சின் விலை 1400 ரூபிள். ஆனால் தங்கத்தின் விலையோ கிராமிற்கு மூன்று முதல் எட்டு ரூபிள் வரைதான். இதன் மூலம் பாம்பு நஞ்சின் மதிப்பு தெரியும். பாம்பிலிருந்து எடுக்கப்படும் நஞ்சு கால்சியம் குளோரைடில் வைக்கப்படுகிறது. அது நீரை உறிஞ்சியபின் படிகங்களாக மருந்தாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. பாம்பு நஞ்சு தசை வலிகளையும் நரம்புக் கோளாறுகளையும் குணப்படுத்துகிறது. கேன்சர் நோய்க்கும் பாம்பின் நஞ்சு மருந்தாகப் பயன்படுகிறது.

**<u>வினாக்கள் :</u>**

i. தங்கத்தை விடச் சிறந்தது .....................
 அ) வைரம் ஆ) பிளாட்டினம்
 இ) கால்சியம் ஈ) பாம்பின் நஞ்சு

ii. ஒரு கிராம் நஞ்சின் விலை 1400 ரூபிள் என விற்கப்படும் நாடு ......
 அ) இந்தியா ஆ) ஜப்பான் இ) இரஷ்யா ஈ) இந்தோனேசியா

iii. பாம்பிலிருந்து எடுக்கப்படும் நஞ்சு எதில் வைக்கப்படுகிறது?
 அ) குளோரைடு கால்சியமில்
 ஆ) குளோரைடில்
 இ) கால்சியம்
 ஈ) கால்சியம் குளோரைடில்

iv. பாம்பிலிருந்து எடுக்கப்படும் நஞ்சு எவ்வாறு மருந்தாலைகளுக்கு அனுப்பப்படுகிறது ?
 அ) வைரங்களாக
 ஆ) கற்களாக
 இ) நீரை உறிஞ்சியபின்
 ஈ) நீரை உறிஞ்சியபின் படிகங்களாக

v. பாம்பின் நஞ்சு எந்த நோயைப் குணமாக்க உதவுகிறது?
 அ) மலேரியா ஆ) காய்ச்சல்
 இ) மஞ்சள் காமாலை ஈ) புற்று நோய்

**3) விளம்பரத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடை தருக. 5**





**வினாக்கள்**


1. இது எதனைப் பற்றிய விளம்பரம்?
2. படத்தில் எத்தனை மனிதர்கள் உள்ளனர்?
3. திரைப்படத்தின் பெயர் என்ன?
4. விளம்பரம் எந்த மொழியில் உள்ளது?
5. எந்த தயாரிப்பு நிறுவனம் இதனைத் தயாரித்துள்ளது?

**பகுதி – ஆ (எழுதுதல்)**

**4**. உமது ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கு செல்ல இரண்டு நாட்கள் விடுப்பு வேண்டி வகுப்பாசிரியருக்கு ஒரு கடிதம் எழுதுக. 6

**5. பின்வரும் படங்கள் குறித்து ஐந்தைந்து வாக்கியங்கள் எழுதுக. 8**





## பகுதி இ (இலக்கணம்)

**6. அகர வரிசையில் எழுதுக. (3)**

சார்பு, சுக்கு, சேய்மை, சொல்லாட்சி, சட்டம், சைவம், சிறுகதை, செவ்வாழை, சௌமியா, சீர், சோளம், சூடாமணி.

**7. உயர்திணை, அஃறிணை கண்டறிந்து எழுதுக. (3)**

வயல், முகிலன், குதிரை, கயல்விழி, அம்மா, ஆசிரியர், புத்தகம், மரம், சுரதா, கடல்.

**8. பால் அறிந்து எதிர்சொல் எழுதுக. (3)**

i. பெண்
ii. மாணவன்
iii. அரசன்

**9. படத்திற்கு பொருத்தமான பாலை எழுதுக. (3)**







**10. பிழையைத் திருத்தி சரியாக எழுதுக. (3)**

i. ராமன் பாடம் படித்தாள்
ii. கவிதா நடனம் ஆடியது.
iii. நாய் வேகமாக ஓடினான்.

## பகுதி ஈ (இலக்கியம்)

**11. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக. (5)**

யானைகள் எப்பொழுதும் கூட்டமாகத் தான் வாழும். அந்தக் கூட்டத்திற்கு ஒரு பெண் யானைதான் தலைமை தாங்கும். யானைகள் தங்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் ஆகியவற்றிற்காக இடம் பெயர்ந்து கொண்டே இருக்கும். ஒரு யானை நாள் ஒன்றுக்கு 250 கிலோ புல், இலை தழைகளை உணவாக உட்கொள்ளும். அதற்குக் குடிக்க அறுபத்தைந்து லிட்டர் தண்ணீர் தேவைப்படும். யானை மிகுந்த நினைவாற்றல் கொண்ட விலங்கு.

**வினாக்கள்**

i. யானைக் கூட்டத்திற்கு தலைமை தாங்குவது எது?
ii. யானை ஒரு நாளுக்கு எவ்வளவு உணவு உண்ணும்?
iii. நினைவாற்றல் மிக்க விலங்கு எது?
iv. யானைகள் ஏன் இடம்பெயர்கின்றன?
v. பத்திக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.

**12. பின்வரும் பாடலைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. (4)**

கார்த்திகை தீபமெனக்
    காடெல்லாம் பூத்திருக்கும்
பார்த்திட வேண்டுமடி – கிளியே
    பார்வை குளிருமடீ!

**வினாக்கள்**

i. பாடலின் தலைப்பு யாது?
அ) காடு ஆ) மரம் இ) விலங்கு
ii. பாடலின் ஆசிரியர் யார்?
அ) பாரதியார் ஆ) பரதிதாசன் இ) சுரதா
iii. காடு எவ்வாறு பூத்திருக்கிறது?
அ) அழகாக ஆ) கார்த்திகை தீபம் போல இ) வண்ணமயமாக
iv. காடெல்லாம் – பிரித்து எழுதுக
அ) காடு + எல்லாம் ஆ) காடெல் + லாம் இ) கா + டெல்லாம்

**13. உனக்குத் தெரிந்த திருக்குறளை எழுதுக. 2**

**14. சொற்கள் உருவாக்குக. (6)**

| தமிழ்மொழி | தமிழ் | மொழி |
|---|---|---|
| வாழைமரம் | | |
| பூமாலை | | |
| கொடிமரம் | | |
| கைவளையல் | | |
| மீன்விழி | | |
| கைபேசி | | |

**15. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. 14**

i. தமிழ் மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.
ii. மொழியின் இரு வடிவங்கள் யாவை?
iii. வட்டார மொழி எனப்படுவது யாது?
iv. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?
v. யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?
vi. சிறுவர்களுக்கு பழங்கள் கிடைக்க உதவியவர் யாவர்?
vii. காடி – வரையறுக்க.

**16. புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக. 5**